# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2016

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 12

சுட்டெண்: | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. உயிர்மெய்யெழுத்துகள்

அ) 12 ஆ)18 இ) 30 ஈ) 216

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. தமிழர் வீரம் விளைவது எதனால் எனக் கூறப்படுகிறது.

அ) பயத்தினால் ஆ) மானத்தினால்

இ) செல்வத்தினால் ஈ) சினத்தினால்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. தமிழரிடையே ஆரிய ஊடுருவல் ________________ காலத்தில் தொடங்கியது.

அ) இடைக்கழக ஆ) முதற்கழக இ) நடுக்கழக ஈ) கடைக்கழக

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. ஆரியர் இந்தியாவுக்குள் நுழைந்த வழி

அ) கடுகண்ணாவை கணவாய் ஆ) கலகெதர கணவாய்

இ) கைபர் கணவாய் ஈ) சிந்துவெளி கணவாய்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. பின்வருவனவற்றுள் முன்னிலை இடத்திற்கு எடுத்துக்காட்டு

அ) நீ ஆ) நான் இ) நாங்கள் ஈ) அவன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. கடலோரக் களப்புகளில் அதிகமாக மலரும் பூ

அ) முல்லை ஆ) நெய்தல் இ) மருதம் ஈ) குறிஞ்சி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. முன்பனி என்ற சொல்

அ) சினைப்பெயர் ஆ) பொருட்பெயர் இ) காலப்பெயர் ஈ) குணப்பெயர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. மூவறிவு உடையது

அ) எறும்பு ஆ) தும்பி இ) நண்டு ஈ) சிப்பி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. மடுசீமாவிலிருந்து ஊறத்தொடங்கி அக்கரைப்பற்றுக்கு அண்மையில் கடலில் சேர்கின்ற ஆறு

அ) கல்லாறு ஆ) நாயாறு இ) பட்டிப்பளைஆறு ஈ) அருவியாறு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. நன்றும்தீதும் என்னும் பொருளை உணர்த்தும் இணைமொழித்தொடர்

அ) ஒப்பும்உயர்வும் ஆ) அறம்மறம்

இ) உயர்வுதாழ்வு ஈ) கட்டைநெட்டை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. தமிழிலக்கணம் என்பது எவ்வகைப் புணர்ச்சி

அ) இயல்பு ஆ) தோன்றல் இ) திரிதல் ஈ) கெடுதல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர் நாழி முகவாது நாநாழி எனக் கூறியவர்

அ) திருவள்ளுவர் ஆ) ஔவையார் இ) கபிலர் ஈ) இடைக்காடர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. சேரநாடு இன்று இவ்வாறு அழைக்கப்படுகின்றது.

அ) தமிழ்நாடு ஆ) கேரளநாடு இ) கன்னடநாடு ஈ) நாஞ்சில்நாடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. மன்னா நீ நீடுழி வாழ்க! இச் சொல்லியம்

அ) வினா ஆ) செப்பு இ) வியங்கோள் ஈ) வியப்பு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம் எனக் கூறும் நூல்

அ) தொல்காப்பியம் ஆ) நன்னூல் இ) சிலப்பதிகாரம் ஈ) மணிமேகலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. ஏழ்மையின் வலிமை என்ற பொருளைக் குறிக்கும் பழமொழி

அ) ஏழை சொல் அம்பலம் ஏறாது.

ஆ) முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்.

இ) ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும்.

ஈ) இலையும் பழுப்பும் எங்கும் உண்டு.

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. இன்று நல்ல மழை. இச்சொல்லியத்தில் தோன்றா உறுப்பு

அ) எழுவாய் ஆ) பயனிலை இ) செயப்படுபொருள் ஈ) அடைமொழி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. கூறிய கருத்தை அழுத்துவதற்காக ஒரு சொல்லை இரண்டு முறை இணைத்துச் சொல்லுதல்

அ) அடுக்கிடுக்குத்தொடர் ஆ) இணைமொழி

இ) அடுக்குத்தொடர் ஈ) உவமைத்தொடர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. பதி எழு அறியாப் பழங்குடி என்று தமிழ்க்குடியைப் போற்றும் நூல்

அ) திருக்குறள் ஆ) சிலப்பதிகாரம் இ) நன்னூல் ஈ) தொல்காப்பியம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. கி.பி 6 தொடக்கம் 9ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தைக் கைப்பற்றி ஆண்ட மன்னர்

அ) சோழர் ஆ) பாண்டியர் இ) சேரர் ஈ) பல்லவர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. திருக்குறள் மனவுறுதி உடையோரை இப்படிக் கூறுகின்றது.

அ) கரவோர் ஆ) இரவோர் இ) உரவோர் ஈ) இரப்போர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. மன்னார் அமுதன் எழுதிய கவிதையின் தலைப்பு

அ) ஓங்குபுகழ் கற்கள் ஆ) வெந்ததே சிந்தை

இ) மானிடாசொல் ஈ) எழுத்தாணிஏந்தும் ஈசர்கள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. ஐம்பெருங்குழுவில் அடங்காதவர்

அ) அந்தணர் ஆ) படைத்தலைவர் இ) ஒற்றர் ஈ) நகர மாந்தர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. அல்வழித் தொகைகள்

அ) 5 ஆ) 6 இ) 8 ஈ) 12

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. பெரும்பொழுதுகளில் ஒன்று

அ) காலை ஆ) மாலை இ) கூதிர் ஈ) யாமம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. மாலை வேளையில் அடிவானம் ________________ காணப்பட்டது.

அ) பச்சைப்பசேலென ஆ) கன்னங்கரேலென

இ) வெள்ளைவெளேரென ஈ) செக்கச்செவேலென

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. அந்நாளில் மிலேச்சர் என அழைக்கப்பட்ட இனத்தவர்கள்

அ) திராவிடர் ஆ) ஆரியர் இ) ஐரோப்பியர் ஈ) ஆபிரிக்கர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. தமிழர் வீரம் என்ற பாடத்தில் சேர மன்னனும் சோழ மன்னனும் போர் புரிந்த இடம்

அ) வெண்ணிப்பறந்தலை ஆ) தலையலங்கானல்

இ) இடைக்குன்றூர் ஈ) கலிங்கம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை குன்றுகளில் பூக்கும் பூ

அ) குறிஞ்சிப்பூ ஆ) நெய்தற்பூ இ) முல்லைப்பூ ஈ) மருதம்பூ

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. "எம் அம்பு கடிவிடுதும் நும்மரண் சேர்மின்". இதில் வந்துள்ள உரிச்சொல்

அ) சேர் ஆ) கடி இ) விடு ஈ) அம்பு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

## 2) பாடநூல் வினா - ஏழில் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. **குறள்:-** *உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்*
*கல்லார் அறிவிலா தார்*

இக்குறளின் பொருளைத் தருக.

______________________________________________

______________________________________________

2. சிங்களமயமாக்கப்பட்ட தமிழர் ஊர்கள் நான்கைக் குறிப்பிடுக.

______________________________________________

______________________________________________

3. ஆரியர் மறைத்து வைத்த தமிழர்களுடைய நூல்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

______________________________________________

______________________________________________

4. 1977 ஆம் ஆண்டு பல்லாயிரம் மலையக மக்கள் ஏதிலிகளாக வட தமிழீழத்திற்கு வந்தமைக்குரிய காரணம் யாது?

______________________________________________

______________________________________________

5. விண்ணுந்துபற்றிக் கூறும் இலக்கியங்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

______________________________________________

______________________________________________

6. கள்ளிச் செடிக்குப் பாலை எனப்பெயர் வரக்காரணம் யாது?

______________________________________________

______________________________________________

7. ஊர்காண் காதையில் தென்றல் வரவு பற்றிப் பாடிய புலவர் யார்?

______________________________________________

புள்ளிகள் 10

## 3) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

தமிழர் வணிக வரலாறு மிகவும் தொன்மை வாய்ந்தது. பழங்காலந் தொட்டே தமிழர் உள்நாட்டு, அயல்நாட்டு வணிகத்தில் சிறப்புற்றிருந்தனர். உள்நாட்டு வணிகத்தைவிட அயல்நாட்டு வணிகத்திலேயே மிகுந்த வருமானத்தைப் பெற்றனர். அயல்நாட்டு வணிகத்திலும் தரைவழியாகச் செய்யும் வணிகத்தைவிட நீர்வழியாகச் செய்யும் வணிகம் பெரும் பொருளை ஈட்டிக் கொடுத்தது. எனவே அந்நாளில் கடல் வணிகமே சிறந்திருந்தது. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்னும் ஔவைமொழியும் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்னும் கணியன் பூங்குன்றன் மொழியும் தமிழர்களின் உலகளாவிய சிந்தனைக்கும் பன்னாட்டுத் தொடர்புகளுக்கும் சான்றாகும். பழங்காலத்தில் தமிழர் பிற நாடுகளுக்குக் கடற்செலவு மேற்கொண்ட செய்தி முந்நீர் வழக்கம் எனத் தொல்காப்பியத்தில் குறிக்கப்பட்டுள்ளது. தமிழர் பொருளீட்டுதலைத் தம் கடமையாகக் கருதினர். இதனைத் தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் இடம்பெற்றுள்ள பொருள்வயிற் பிரிவு விளக்குகிறது. இப்பிரிவு காலில்பிரிவு (தரைவழிப்பிரிதல்) கலத்தில்பிரிவு (நீர்வழிப்பிரிதல்) என இருவகைப்படும். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர் மேற்கே கிரேக்கம், உரோம், எகிப்து முதல் கிழக்கே சீனம் வரையிலும் கடல் வழி வணிகத்தொடர்பு கொண்டிருந்தனர். எகிப்து, பாலத்தீனம், மெசப்பதேமியா, பாபிலோனியா, சீனம் ஆகிய நாடுகள் தமிழரின் பொருட்களை விரும்பிப் பெற்றன. ஏலமும் இலவங்கமும் இஞ்சியும் மிளகும் மேற்காசிய நாடுகளில் அதிக விலைக்கு விற்கப்பட்டன. தமிழ்நாட்டில் பிற நாட்டார் உள்ளத்தைக் கவரும் பல பொருட்கள் மிகுதியாகக் கிடைத்தன. அவற்றுள் முத்தும் பவளமும் ஆரமும் அகிலும் வெண்துகிலும் சங்கும் குறிப்பிடத்தக்கன. பழந்தமிழர் கிரேக்கரையும் உரோமானியரையும் யவனர் என அழைத்தனர். பழங்காலத்திலேயே பலவகையான கப்பல்கள் கட்டப்பட்டன.ஒவ்வொரு பெரிய கப்பலும் மதில்சூழ்ந்த கோட்டை போல் காணப்பட்டது.

1. பழங்காலத்தில் தமிழர் பிற நாடுகளுக்குக் கடற்செலவு மேற்கொண்ட செய்தி எந்நூலில் குறிக்கப்பட்டுள்ளது?

2. பழந்தமிழர் யவனர் என யாரை அழைத்தனர்?

3. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்பது யாருடைய மொழி?

4. பொருள்வயிற் பிரிவின் வகைகள் எவை?

5. மேற்காசிய நாடுகளில் அதிக விலைக்கு விற்கப்பட்ட பொருட்கள் எவை?

புள்ளிகள் 10

4) **பின்வரும் கவிதைத் தலைப்பில் ஒன்றினைத் தெரிவு செய்து பத்து வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

- தன் உறவாய் இருந்தாலும் - தன்
  இனத்திற்கு பகையாய் இருந்தால்

- பொங்கி எழுந்தவர் நாம் போகுமிடம் அறியவில்லை
  தங்குதடை இல்லாமல் தங்கிவிட்டோம் அகிலமெங்கும்

- இனிமை பொங்கிட இயற்கையின் படைப்பில்
  வந்ததே இளவேனில்! வந்ததே இளவேனில்

புள்ளிகள் 10

## 5) இலக்கண - மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. தரப்பட்டுள்ள சொற்களின் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுக.

வலை :- ______________________

வளை :- ______________________

2. பின்வருவனவற்றிற்கு ஒவ்வொரு எடுத்துக்காட்டுத் தருக.

தனிமொழி :- ______________________

தொடர்மொழி :- ______________________

பொதுமொழி :- ______________________

3. பின்வரும் மரபுத் தொடர்கள் ஒவ்வொன்றிற்கும் மூன்று எடுத்துக்காட்டுகள் தருக.

அடுக்குத் தொடர் :- ______________________

இரட்டைக்கிளவி :- ______________________

4. பின்வரும் சொல்லியங்களில் இடம் பெற்றுள்ள வேற்றுமை உருபுகள் எவை? அவை எத்தனையாம் வேற்றுமை?

| சொல்லியம் | உருபு | வேற்றுமை |
|---|---|---|
| எழிலனது சிற்றுந்து அழகானது. | | |
| குருவி கூட்டில் இருக்கிறது. | | |
| மாதவியில் கண்ணகியே சிறந்தவள். | | |

5. பின்வரும் வல்லின மெய்களின் இனவெழுத்துகளைத் தருக.

க் ______________ த் ______________

ச் ______________ ப் ______________

ட் ______________ ற் ______________

**புள்ளிகள் 15**

**6) பந்தியை வாசித்து; மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.**

தமிழ் மொழியின் பெருமை சொல்லில் அடங்காதது. பல்லாயிரம் ஆண்டுகளாகச் செழித்து வளரும் மொழி தமிழ்மொழி. இனியும் காலங்காலமாக நிலைத்து நிற்கப்போகும் மொழி தமிழ்மொழி. அந்த மொழியின் இலக்கண, இலக்கிய வலிமையும் வளமையும் அதனைக் காலந்தோறும் அழியாமல் காத்து வருகின்றன. அத்தகைய தமிழ்மொழியை அறிஞர்கள் பலர் போற்றியுள்ளனர், வாழ்த்தியுள்ளனர். தாய் எவ்வாறு குழந்தைகளின் தேவையறிந்து பணியாற்றுவாளோ அது போலத் தமிழ்மொழி தமிழ் மக்களின் தேவைகளை அறிந்து பணியாற்றுகிறது. தாயினும் சிறந்தது தமிழே! உலகில் உயர்ந்தது தமிழே! எனப் பாவாணரும் தமிழின் பெருமைபற்றிக் கூறுகின்றார். புரட்சிக் கவிஞர் பாவேந்தர் தமிழைப் பற்றிப் பாடும் பொழுது தமிழுக்கும் அமுது என்று பேர் எனப் பாடினார். அமிழ்தைப் போன்ற சிறப்புடைய தமிழ்மொழி தமிழரின் தாய்மொழி. தாய்மொழியாகிய தமிழைத் தாயாகவே கருதித் தமிழர் வணங்கி வருகின்றனர். தாயின் மாண்பிற்கு ஈடு இணை சொல்ல முடியாததைப் போலத் தமிழின் மாண்பிற்கும் ஈடுஇணை கூற இயலாது. தாயில்லாமல் குழந்தை இல்லை என்பதைப் போலத் தமிழில்லாமல் தமிழர்கள் வாழ இயலாது. அந்த அளவிற்குத் தமிழரின் உணர்விலும் உயிரிலும் அறிவிலும் தமிழ்மொழி கலந்துள்ளது.

**சுருக்கத்திற்கான குறிப்புகள் :**

- தரப்பட்டுள்ள பந்தியை மீண்டும் மீண்டும் வாசித்து விளங்கிக் கொள்ளல்.
- அதன் உட்கருத்தை அறிதல்.
- உவமைகளையும் எடுத்துக்காட்டுகளையும் கூறியது கூறலையும் தவிர்த்தல்.
- எடுக்கப்பட்ட குறிப்புகளைத் தொகுத்து எழுதுதல்.

____________________

____________________

____________________

____________________

____________________

____________________

____________________

____________________

____________________

____________________

____________________

____________________

புள்ளிகள் 05

7) கீழுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

☆ ஈழத்தமிழரும் ஏதிலி வாழ்வும்

☆ நீர் கற்ற தமிழ்க்கல்வியும் உமது இனத்தின் விடிவும்

☆ அறிவியல் வளர்ச்சியும் இன்றைய உலகமும்

**புள்ளிகள் 20**